# KANYAKUMARI RURAL DEVELOPMENT SOCIETY
## THIRUPATHISARAM

## ACTIVITY PLANNER – 2021

| Sl. No. | WORK OF THE YEAR 2021 | Jan. | Feb | Mar. | April | May | June | July | Aug. | sep. | Oct. | Nov. | Dec. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஆதரவற்றவர்களை சந்தித்தல் | | | | | | | | | | | | |
| 2. | நமது சிறப்பு இல்லங்களை பார்வையிடுதல். | | | | | | | | | | | | |
| 3. | நமது சிறப்பு இல்லங்களில் புதிய நபர்களை சேர்த்தல். | | | | | | | | | | | | |
| 4. | ஆதார் கார்டு எடுக்க ஏற்பாடு செய்தல். | | | | | | | | | | | | |
| 5. | நன்கொடையாளர்களை சந்தித்தல். | | | | | | | | | | | | |
| 6. | மருத்துவ முகாம்கள் நடத்துதல். | | | | | | | | | | | | |
| 7. | மருத்துவ வசதி செய்து கொடுத்தல் | | | | | | | | | | | | |
| 8. | CASE HISTORY எழுதுதல். | | | | | | | | | | | | |
| 9. | நன்கொடைகள் வசூலித்தல். | | | | | | | | | | | | |
| 10. | விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுத்தல். | | | | | | | | | | | | |
| 11. | விழாக்கள் கொண்டாடுதல். | | | | | | | | | | | | |
| 12. | பெற்றோர் மற்றும் உறவினர்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல். | | | | | | | | | | | | |
| 13. | பணியாளர்கள் கூட்டங்கள் நடத்துதல். | | | | | | | | | | | | |
| 14. | ஒருங்கிணைப்பாளர் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல். | | | | | | | | | | | | |

Prepared by.

## 1. ஆதரவற்றவர்களை சந்தித்தல்:

ஆதரவற்ற நிலையில் இருப்பவர்களை கண்டறிந்து நமது சிறப்பு இல்லங்களில் சேர்த்தல்.

## 2. நமது சிறப்பு இல்லங்களை பார்வையிடுதல்:

தினமும் ஒரு பணியாளர் குறைந்த பட்சம் ஒரு சிறப்பு இல்லத்தை உணவு வேளையில் பார்வையிடப்படும்.

## 3. நமது சிறப்பு இல்லங்களை புதிய நபர்களை சேர்த்தல்:

நமது சிறப்பு இல்லங்களில் ஆதரவற்ற மற்றும் பராமரிப்பு தேவைப்படும் மூளைவளர்ச்சி குன்றிய ஆண்கள், பெண்கள், (தன்னுடைய சுய தேவைகளை தானே பூர்த்தி செய்யும் நிலையில் உள்ளவர்கள்), முதியோர்கள், மனநோயினால் பாதிக்கப்பட்ட நபர்கள் பொது இடங்களிலோ, வீடுகளிலோ இருக்கும் நபர்கள் கேட்கும் பட்சத்தில் அவர்களை நமது இல்லங்களில் சேர்க்க ஏற்பாடு செய்யப்படும்.

## 4. ஆதார் கார்டு வாங்க ஏற்பாடு செய்தல்:

நமது சிறப்பு இல்லங்களில் புதிதாக சேர்க்கப்படும் ஆதரவற்ற நிலையில் உள்ள நபர்களுக்கு ஆதார் கார்டு எடுக்க நடவடிக்கை எடுத்து ஆதார் கார்டு வாங்கப்படும்.

## 5. நன்கொடையாளர்களை சந்தித்தல்:

வங்கி முகவர்கள், மதசார்பு பணியாளர்கள், குழுக்கள், சுகாதார பணியாளர்கள், பஞ்சாயத்து உறுப்பினர்கள், ரசிகர் மன்றங்கள், தனித்து வாழும் பெண்கள் ஆகியோர்களை சந்தித்து நமது திட்டங்களை பற்றிய விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுக்கப்படும்.

## 6. மருத்துவ முகாம்கள் நடத்துதல்:

நமது சிறப்பு இல்லங்களில் தங்கியிருக்கும் நபர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகள் செய்து கொடுக்க மருத்துவ முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

**1. மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி:**

பிப்ரவரி - தோல் மருத்துவ முகாம்

ஜூன், செப்டம்பர் - பொது மருத்துவ முகாம்

**2. ஸ்பாஸ்டிக் சென்டர் ஆ்ஃப் கன்னியாகுமரி:**

மார்ச் - கண் மருத்துவ முகாம்

ஜூன் - பொது மருத்துவ முகாம்

அக்டோபர் - தோல் மருத்துவ முகாம்

**3. நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:**

பிப்ரவரி - பொது மருத்துவ முகாம்

ஜூன் - கண் மருத்துவ முகாம்

அக்டோபர் - தோல் மருத்துவ முகாம்

**4. அன்பாலயா:**

மார்ச் - மனநல மருத்து முகாம்

மே - தோல் மருத்துவ முகாம்

செப்டம்பர் - மனநல மருத்துவ முகாம்

மாதம் ஒருமுறை மருத்துவ பரிசோதனை செய்யப்படும்.

## 7. மருத்துவ வசதி செய்து கொடுத்தல்:

நமது சிறப்பு இல்லங்களில் தங்கியிருக்கும் நபர்களுக்கு தேவையான மாத்திரைகள் மாதந்தோறும் வாங்கவும், அரசு மருத்துவமனையில் ஆதரவற்ற நிலையிலும், பராமரிப்பு தேவைப்படும் நிலையிலும் தங்கியிருக்ககூடிய பெண்களை சந்தித்து அவர்களை நமது இல்லங்களில் சேர்க்க சந்தித்து பேசவும், நமது இல்லங்களில் தங்கியிருக்கும் நபர்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருக்கும் போது அவர்களையும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படும்.

## 8. CASE HISTORY:

நமது சிறப்பு இல்லங்களுக்கு புதிதாக வரும் நபர்களுக்கு, அவர்களை பற்றிய முழு தகவல்களும், அவரது உடல்நிலையையும், அங்க மச்ச அடையாளங்களையும், இங்கு வருவதற்கு முன்னால் அவர் எந்த சூழ்நிலையில்

இருந்தார் என்பதையும், அவருடைய அட்மிஷன் நேரத்தில் உள்ள புகைப்படத்துடன் Case history எழுதப்படும்.

## 9. நன்கொடைகள் வசூலித்தல்:

அன்பியங்கள், குழுக்கள், மற்றும் உதவிகள் செய்யும் நபர்களை சந்தித்து பேசி நமது **‘கார்டு’** நிறுவனத்தின் திட்டங்களை பற்றி கூறி நமது சிறப்பு இல்லங்களுக்கு தேவையான உதவிகளை செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

## 10. விழிப்புணர்வு கருத்து கொடுத்தல்:

நமது சிறப்பு இல்லங்களை பார்வையிட வரும் குழுக்கள், நண்பர்கள், மதசார்பு குழுக்கள், கல்லூரி மாணவ, மாணவிகளுக்கும், ஊனம் பற்றிய விழிப்புணர்வு கருத்துக்களையும், ‘கார்டு’ நிறுவனத்தின் பணிகள் பற்றிய கருத்துக்களையும் விளக்கி சொல்லப்படும்.

ஆலயங்களில் உள்ள அன்பியங்கள், பெண்கள் சங்கங்கள், சுய உதவி குழுக்களுக்கு ஊனம் பற்றிய விழிப்புணர்வு கருத்துக்களையும் ‘கார்டு’ நிறுவனத்தின் பணிகளையும் விளக்கப்படும்.

## 11. விழாக்கள் கொண்டாடுதல்:

நமது சிறப்பு இல்லங்களில் நடைபெறும் விழாக்களுக்கு தேவையான உதவிகள் செய்து கொடுத்து விழாக்களில் கலந்து கொள்ளப்படும்.

### SMR:

ஜனவரி - புது வருட விழா, பொங்கல் விழா, குடியரசு தின விழா
மார்ச் - பெண்கள் தின விழா
ஏப்ரல் - ஆண்டு விழா
ஆகஸ்ட் - சுதந்திர தின விழா

செப்டம்பர் - விளையாட்டு விழா

அக்டோபர் - சரஸ்வதி பூஜை

நவம்பர் - தீபாவளி, திருக்கார்த்திகை தீப விழா

டிசம்பர் - கிறிஸ்மஸ் விழா

**SPASTI:**

ஜனவரி - பொங்கல் விழா, குடியரசு தின விழா

ஏப்ரல் - ஆண்டு விழா

ஆகஸ்ட் - சுதந்திர தின விழா

செப்டம்பர் - விளையாட்டு விழா

அக்டோபர் - சரஸ்வதிபூஜை

டிசம்பர் - கிறிஸ்மஸ் விழா

**GSHA:**

ஜனவரி - பொங்கல் விழா

அக்டோபர் - முதியோர் தின விழா, சரஸ்வதிபூஜை

நவம்பர் - ஆண்டு விழா, திருக்கார்த்திகை தீப விழா, தீபாவளி.

டிசம்பர் - கிறிஸ்மஸ் விழா.

**ANBALAYA:**

ஜனவரி - பொங்கல் விழா, குடியரசு தின விழா

மார்ச் - பெண்கள் தின விழா

ஆகஸ்ட் - சுதந்திர தின விழா, ஆண்டு விழா

அக்டோபர் - மனநலநாள், சரஸ்வதிபூஜை

நவம்பர் - தீபாவளி, திருக்கார்த்திகை தீப விழா

டிசம்பர் - கிறிஸ்மஸ் விழா.

## 12. பெற்றோர் மற்றும் உறவினர் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்:

நமது சிறப்பு இல்லங்களில் நடைபெறும் பெற்றோர் மற்றும் உறவினர் கூட்டங்களில் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளை பற்றிய தகவல்களை பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கு தெரியபடுத்தப்படும்.

SMR - மே, நவம்பர் - முதல் ஞாயிறு

SPASTI - மார்ச், நவம்பர் - மூன்றாவது ஞாயிறு

ANBALAYA - பிப்ரவரி, ஜூன், நவம்பர் - கடைசி ஞாயிறு

## 13. பணியாளர்கள் கூட்டம் மற்றும் பணிமதிப்பீடு கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்:

ஒவ்வொரு மாதமும் நமது சிறப்பு இல்லங்களில் நடைபெறும் பணியாளர்கள் கூட்டங்களில் கலந்து கொண்டு நமது பணிகளில் ஏற்பட்ட

சிரமங்கள், அதை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்று பகிர்ந்து கொண்டு திட்டமிட்ட பணிகளை சிறப்பாக செய்வதற்கு வழிமுறைகள் கூறப்படும். அத்துடன் அவர் தம் பணியினை சிறப்பாக செய்ய உதவிகள் செய்யப்படும்.

## 14. ஒருங்கிணைப்பாளர் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்:

மாதந்தோறும் முதல் சனிக்கிழமை நிர்வாக அலுவலகத்தில் நடைபெறும் ஒருங்கிணைப்பாளர் கூட்டங்களில் கலந்து கொண்டு திட்டமிட்ட பணிகளை செய்வதற்கு தேவையான வழிமுறைகளை கேட்டறியப்படும். திட்டமிட்ட பணிகளை சிறப்பாக செய்திடவும், திட்ட பணியாளர்களுக்கு பணிகளில் உள்ள சிரமங்களை நிவர்த்தி செய்திட ஒருங்கிணைப்பாளர் கூடடஙங்களில் கலந்து ஆலோசிக்கப்படும்.

திருப்பதிசாரம்,
07-01-2021. துணை திட்ட அலுவலர்கள்.

திட்ட அலுவலர்.

திட்ட இயக்குநர்.

# குமரி மாவட்ட ஊரக முன்னேற்ற சங்கம்
# திருப்பதிசாரம் - அஞ்சல்

## ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம்

## பணிகள் பற்றிய வருட அறிக்கை - 2021

குமரி மாவட்ட ஊரக முன்னேற்ற சங்கம் கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை தாலுகாவுக்குட்பட்ட திருப்பதிசாரம் கிராமத்தை தலைமையிடமாகக் கொண்டு கடந்த 37 ஆண்டுகளாக பல்வேறு நலப்பணிகளை செய்து வருகிறது. இதில் ஆதரவற்ற ஊனமுற்றோர், முதியோர், மனநோயினால் பாதிக்கப்பட்டோர் நலனுக்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் கீழ் 2021-ம் ஆண்டு செய்த பணிகள் பற்றிய விரிவான அறிக்கை சமர்ப்பிக்கபடுகிறது.

## திட்டத்தின் நோக்கம்:

ஊனமுற்றோர்களின் நலனில் அக்கரை கொண்டு அவர்களின் எதிர்கால வாழ்க்கை பாதிக்கப்படுவதை தடுக்கவும், மனவளர்ச்சி குன்றிய மாணவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும், ஆதரவற்ற முதியோர்களை பராமரிக்கவும், ஆதரவற்ற மனநோயினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மறுவாழ்வு கொடுத்து அவர்களும் சமுதாய மக்களோடு இணைந்து வாழ்வதற்கு வழிவகை செய்யும் நோக்கத்தோடு இத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 1. மேற்கொண்ட திட்டங்கள்:

1. **மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தங்கும் வசதியுடன் கூடிய தொழிற் பயிற்சி மையம் –** திருப்பதிசாரம்.

2. **ஸ்பாஸ்டிக்ஸ் சென்டர் ஆப் கன்னியாகுமரி –** மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான தங்கும் வசதியுடன் கூடிய தொழிற்பயிற்சி மையம் - புளியடி, நாகர்கோவில்.

3. **நல்ல சமாரியன் முதியோர் இல்லம் (பெண்கள்)** - ஆசாரிபள்ளம்.

4. **அன்பாலயா மனநோயாளிகள் இல்லம் (பெண்கள்) –** ஈத்தங்காடு, வெள்ளிச்சந்தை.

5. சமுதாயம் சார்ந்த மறுவாழ்வுத் திட்டம்.
6. வளமேம்பாட்டுத்திட்டம்.

ஆகிய திட்டங்களின் கீழ் மேற்கொண்ட பணிகள் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளது

## 2. மேற்கொண்ட பணிகள்:

1. ஆதரவற்றவர்களை சந்தித்தல்
2. நமது சிறப்பு இல்லங்களை பார்வையிடுதல்.
3. நமது சிறப்பு இல்லங்களில் புதிய நபர்களை சேர்த்தல்.
4. ஆதார் கார்டு எடுக்க ஏற்பாடு செய்தல்.
5. நன்கொடையாளர்களை சந்தித்தல்
6. மருத்துவ முகாம்கள் நடத்துதல்
7. மருத்துவ வசதி செய்து கொடுத்தல்
8. Case History எழுதுதல்.
9. நன்கொடைகள் வசூலித்தல்.
10. விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுத்தல்
11. விழாக்கள் கொண்டாடுதல்.
12. பெற்றோர் மற்றும் உறவினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளுதல்.
13. பணியாளர்கள் கூட்டங்கள் நடத்துதல்.
14. ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்.

## 3. திட்டப்பணிகள் யார் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

திட்ட இயக்குனர், உதவி திட்ட இயக்குனர், திட்ட அலுவலர், உதவி திட்ட அலுவலர்கள், நிர்வாக பணியாளர்கள், விடுதி பணியாளர்கள் மற்றும் உதவி பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

## 4. <u>செய்து முடித்த பணிகள்:</u>

### 1. <u>ஆதரவற்றவர்களை சந்தித்தல்:</u>

இந்த ஆண்டு திட்ட அலுவலர், உதவி திட்ட அலுவலர்களால் மொத்தம்
ஆதரவற்றவர்களை சந்தித்து பேசப்பட்டுள்ளது.

### 2. <u>சிறப்பு இல்லங்களை பார்வையிடுதல்:</u>

இந்த ஆண்டு திட்ட அலுவலர், உதவி திட்ட அலுவலர்கள் சிறப்பு இல்லங்களை பார்வையிட்ட விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இல்லத்தையும் பார்வையிட செல்லும் போது அந்த இல்லத்தின் பணிகளையும், பயனாளிகளையும் கவனிக்கப்பட்டுள்ளது. சிறப்பு இல்லத்திற்கு வரும் பார்வையாளர்களிடம் நம்முடைய திட்டத்தின் நோக்கம் பற்றியும் திட்டப்பணிகளையும் செயல்படுத்தும் பணிகள் பற்றியும் கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஆதரவற்ற **மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற் பயிற்சி மையம்** முறையும், **'ஸ்பாஸ்டி' தொழிற்பயிற்சி மையம்** முறையும், **நல்ல சமாரியன் முதியோர் இல்லம்** முறையும், **அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்** முறையும் பார்வையிடப்பட்டுள்ளது.

**இந்த வருடம் தொழிற்பயிற்சி இல்லங்களை பார்வையிட்ட விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ. எண். | சிறப்பு இல்லங்களை பார்வையிட்ட பணியாளர்கள் | பார்வையிட்ட சிறப்பு இல்லங்கள் | | | |
|---|---|---|---|---|---|
| | | SMR | SPASTI | GSHA | ANBALAYA |
| 1. | R. விக்டோரியா | | | | |
| 2. | J. ஸ்ரீகலா | | | | |
| 3. | C. விஜி | | | | |
| 4. | S. அமல சரோஜி | | | | |
| Total | | | | | |

## 3. நமது சிறப்பு இல்லங்களில் புதிய நபர்களை சேர்த்தல்:

ஆதரவற்ற மனநிலை பாதித்த, மனவளர்ச்சி குன்றியவர்களையும், சிறப்பு பயிற்சி, பராமரிப்பு தேவைப்படும் நபர்களையும், நமது சிறப்பு இல்லங்களில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு புதியதாக இல்லங்களில் சேர்க்கப்பட்டவர்களின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற் பயிற்சி மையம்:

இந்த ஆண்டு புதியதாக

### 'ஸ்பாஸ்டி' மனவளர்ச்சி குன்றிய – ஆண்களுக்கான தொழிற் பயிற்சி மையம்:

இந்த ஆண்டு செல்வன். விமல், செல்வன். ஹரிஹரன், செல்வன். சரவணன், செல்வன். முத்துபெருமாள், செல்வன். ஹெஜோ



ஜாண் சுமன், திருமிகு. செல்வன், செல்வன். செலின்ஸ், செல்வன். ராஜேஷ், செல்வன். ராஜீ, செல்வன். ஐயப்பன், செல்வன். முத்துக் குமார், செல்வன். அபிசாந், செல்வன். டார்வின் ஆகிய 13 மாணவர்களை புதியதாக சேர்த்துக்கொள்ளப்பட்டது.



### நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:



இந்த ஆண்டு திருமதி. ரபியா பேகம், திருமதி. தங்க நாடாச்சி, திருமதி. பிரபாவதி, திருமதி. சுதா, திருமதி. மரிய தங்கம், திருமதி. சுப்பு லெட்சுமி, திருமதி. ஈஸ்வரி, திருமதி. வள்ளியம்மா, திருமதி. லலிதா பாய், திருமதி. முத்து



லெட்சுமி, திருமதி. பார்வதி ஆகிய 11 நபர்களை புதியதாக சேர்க்கப்பட்டுள்ளது.

**அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:**

இந்த ஆண்டு திருமதி. லிசி, திருமதி. விஜி, திருமதி. பேபி, திருமதி. வள்ளி, திருமதி. வித்யா, திருமதி. ஞானசெல்வி, திருமதி. சந்திரா, செல்வி. பெனானி ரோஸ், திருமதி. மேரி உஷா, திருமதி. டொமினிக் தஸ்நேவிஸ், திருமதி. மல்லிகா, திருமதி. நீலாக்குமாரி, திருமதி. மரிய செல்வி, திருமதி. பஞ்ச் அருள் மேரி ஆகிய 14 நபர்களை புதியதாக சேர்த்துக் கொள்ளப்பட்டது.





**இவ்வருடம் நமது சிறப்பு இல்லங்களில் புதியதாக சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ.எண் | சிறப்பு இல்லங்கள் | புதியதாக சேர்க்கப்பட்டநபர்கள் |
|---|---|---|
| 1. | SMR | |
| 2. | SPASTI | 13 பேர் |
| 3. | GSHA | 11 பேர் |
| 4. | ANBALAYA | 14 பேர் |
| | Total | |

## 4. ஆதார் கார்டு எடுக்க ஏற்பாடு செய்தல்:

இந்த ஆண்டு நல்ல சமாரியன் முதியோா் இல்லத்தில் 6 பயனாளிகளுக்கு ஆதாா் காா்டு எடுக்கப்பட்டுள்ளது.

அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் 14 பயனாளிகளுக்கு ஆதாா் வாங்கப்பட்டுள்ளது.

## 5. மருத்துவ முகாம்கள் நடத்துதல்:

### திருப்பதிசாரம் மனவளா்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற் பயிற்சி மையம்:

### ஸ்பாஸ்டி மனவளா்ச்சி குன்றியவா்களுக்கான தொழிற்பயிற்சி மையம்




27.01.22 அன்று ஸ்பாஸ்டி தொழில்பயிற்சி இல்லத்தில் வைத்து காசநோய் கண்டறிதல் மருத்துவ முகாம் நடைபெற்றது. 41 மாணவா்களுக்கு X-ray எடுக்கப்பட்டது.

05.07.21 அன்று ஸ்பாஸ்டி சிறப்பு மையத்தில் வைத்து கொரோனா தடுப்பூசி 59 மாணவா்களுக்கு முதல் டோஸ் போடப்பட்டது.

14.09.21 அன்று ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனை காசநோய் மையம் சாா்பில் ஸ்பாஸ்டி மாணவா்களுக்கு காசநோய் இருக்கிறதா என கண்டறிய சளி பரிசோதனைக்கு எடுக்கப்பட்டது.



28.10.21 அன்று ஸ்பாஸ்டி மாணவா்களுக்கு கொரோனா நோய் தடுப்பு ஊசி 2-வது டோஸ் போடப்பட்டது. 61 மாணவா்களுக்கு இரண்டாவது டோசும், 5 மாணவா்களுக்கு முதல் டோசும் போடப்பட்டது.

## நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:

26.02.21 அன்று Kanyakumari Nurses Welfare Trust சார்பில் முதியோர்களுக்கு பொது மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு மருந்து தேவைப்பட்ட 14 முதியோருக்கு மருந்துகள் வழங்கியுள்ளார்கள்.



29.04.21 அன்று கோட்டாறு ஆயூர்வேத மருத்துவ கல்லூரி மருத்துவ குழுவினரால் Corona Prevention Camp GSHA இல்லத்தில் நடத்தப்பட்டு மருந்துகளும் வழங்கப்பட்டது. 23 முதியோர்கள் பயனடைந்தார்கள்.




12.07.21 அன்று தொல்லவிளை UPHC சார்பில் கொரோனா தடுப்பூசி I$^{st}$ Dose 23 முதியோர்களுக்கு போடப்பட்டது.

10.09.21 அன்று தொல்லவிளை UPHC சார்பில் கொரோனா தடுப்பூசி II$^{nd}$ Dose தடுப்பூசி 21 நபர்களுக்கு போடப்பட்டது.

19.10.21 அன்று ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனை தோல் மருத்துவர் Dr. நிவேதிதா அவர்களால் தோல் மருத்துவ முகாம் நடத்தப்பட்டு தோல் நோயால் பாதிக்கப்பட்ட 4 முதியோர்களுக்கு மருந்துகளும் வழங்கப்பட்டது.

22.11.21 அன்று ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைசித்தா பிரிவு மருத்துவ குழுவினரால் முதியோர்களுக்கு மழைக்கால சிறப்பு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு மருந்துகளும், கபசுர குடிநீரும் கொடுக்கப்பட்டது. 21 பேர் பயனடைந்தார்கள்.

**அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:**

14.02.21, 16.03.21 ஆகிய நாட்களில் Dr. ஜஸ்டின் பால் - மனநல மருத்துவர் அவர்களால் மனநல மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. 25 பேருக்கு மருந்து மாத்திரையும், 18 நபருக்கு அடையாள அட்டைக்கு கையொப்பமிட்டும், 2 நபருக்கு நரம்பியல் மருத்துவரிடம் காண்பித்து மருந்து வாங்க பரிந்துரையும் செய்தார்கள்.






15.10.21 அன்று தக்கலை அரசு மருத்துவமனை மனநல மருத்துவர் Dr. ஈனோக் அவர்கள் அன்பாலயா இல்ல பயனாளிகள் 48 பேருக்கு பரிசோதனை செய்து மருந்து மாற்றி எழுதி கொடுத்துள்ளார்கள். 2 பேருக்கு அடையாள அட்டைக்கு கையொப்பமிட்டு கொடுத்துள்ளார்கள்.

**இந்த ஆண்டு நடைபெற்ற மருத்துவ முகாம்கள் விபரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.**

| **வ. எண்** | **சிறப்பு இல்லங்கள்** | **தேதி** | **நடைபெற்ற மருத்துவ முகாம்கள்** | **மருத்துவமுகாமில் கலந்துகொண்டவர்கள்** |
|---|---|---|---|---|
| 1. | SMR | | | |
| 2. | SPASTI | 27.01.22 | காசநோய் கண்டறிதல் மருத்துவ முகாம் | 41 |
| 3. | GSHA | 26.02.21<br>29.04.21<br>19.10.21 | பொது மருத்துவ முகாம்<br>Corono Prevention Camp<br>தோல் மருத்துவ முகாம் | 14<br>23<br>23 |
| 4. | ANBALAYA | 14.02.21<br>16.03.21<br>15.10.21 | மனநல மருத்துவ முகாம் | |
| | | | | |

## 6. மருத்துவ வசதி செய்து கொடுத்தல்:

ஒவ்வொரு இல்லத்திலும் தங்கியிருக்கும் பயனாளிகளுக்கு உடல்நலக்குறைவு ஏற்படும்பொழுது உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருத்துவரின் ஆலோசனை படி அவர்களுக்கு மருந்து மாத்திரைகளும் மருத்துவ பரிசோதனைகளும், தகுந்த உணவுகளும் உரிய நேரத்தில் கொடுக்கப்பட்டு கவனிக்கப்பட்டுள்ளது.

## மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற்பயிற்சி இல்லம்:

## ஸ்பாஸ்டி மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான தொழிற்பயிற்சி மையம்

ஸ்பாஸ்டி சிறப்பு இல்லத்தில் தங்கியிருக்கும் மாணவர்கள் 14 பேருக்கு தினமும் கொடுக்க வேண்டிய மாத்திரைகள் அரசு மருத்துவமனையில் சென்று மாதாந்திர மாத்திரைகள் வாங்கி கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு உடல்நலம் பாதிக்கப்பட்ட செல்வன். அஜீஸ், செல்வன். சுயம்புலிங்கம் ஆகியோரை ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகள் பிரிவில் சேர்க்கப்பட்டு மருத்துவ சிகிச்சை கொடுக்கப்பட்டது.

செல்வன். அஜீஸ், செல்வன். முத்து, செல்வன். விக்னேஷ், செல்வன். பாபு, செல்வன். ஹரிஹரன், செல்வன். மதன்குமார், செல்வன். ரிக்கு, செல்வன். புதுமை அந்தோணி ராஜ் CBH-க்கு அழைத்து சென்று மருந்து வாங்கப்பட்டது.

02.02.21, 20.11.21 ஆகிய நாட்களில் கிருமி மருந்து கொடுக்கப்பட்டுள்ளது.

01.05.21 முதல் 07.05.21 வரை ஸ்பாஸ்டி மாணவர்கள் அனைவருக்கும் கபசுர குடிநீர், லேகியம், மாத்திரைகள் கொடுக்கப்பட்டுள்ளது. அனைத்து மாணவர்களுக்கும், கோவிஷீல்டு தடுப்பு ஊசி 2வது டோஸ் போடப்பட்டுள்ளது.

## அன்பாலயா:

24.02.21, 23.09.21 ஆகிய நாட்களில் அன்பாலயா இல்ல பயனாளிகளுக்கு கிருமி மருந்து கொடுக்கப்பட்டுள்ளது.

மாதந்தோறும் இஞ்சி சாறு கொடுக்கப்பட்டுள்ளது.

பயனாளிகள் அனைவருக்கும் கோவிஷீல்டு தடுப்பு ஊசி 2-வது டோசும் போடப்பட்டுள்ளது.

திருமதி. பிரேமா ராதாகிருஷ்ணன், திருமதி. ஜெபமலர், செல்வி. ரபியா பேகம், திருமதி. செல்வி ஆகியோருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்ட போது மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருந்து வாங்கப்பட்டது.

தினமும் கொடுக்கக்கூடிய மாத்திரைகள் மாதந்தோறும் ஆசாரிபள்ளம், தக்கலை அரசு மருத்துவமனைகளில் சென்று வாங்கி கொடுக்கப்பட்டுள்ளது.

**நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:**

முதியோர்களுக்கு சுகவீனம் ஏற்படும் எந்த நேரத்திலும் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருத்துவரின் ஆலோசனைப்படி அவர்களுக்கு மருந்து மாத்திரைகள், மருத்துவ பரிசோதனைகளும், தகுந்த உணவுகளும் உரிய நேரத்தில் அளிக்கப்பட்டு வருகின்றது.

## 7. CASE HISTORY எழுதுதல்:

**SMR:**

மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பயிற்சி மையத்தில் Case History எழுதப்பட்டது.

**SPASTI:**

இந்த ஆண்டு புதியதாக சேர்க்கப்பட்ட 13 மாணவர்களுக்கும் Case History எழுதப்பட்டுள்ளது.

**GSHA**

இந்த ஆண்டு புதியதாக சேர்க்கப்பட்ட 11 முதியோர்களுக்கும் Case History எழுதப்படடுள்ளது.

**ANBALAYA:**

இந்த ஆண்டு புதியதாக சேர்க்கப்பட்டுள்ள 14 பயனாளிகளுக்கும் Case History எழுதப்பட்டுள்ளது.

| வ.எண் | சிறப்பு இல்லங்கள் | Case History |
|---|---|---|
| 1. | SMR | |
| 2. | SPASTI | 13 |
| 3. | GSHA | 11 |
| 4. | ANBALAYA | 14 |

## 8. நன்கொடை வசூலித்தல்:

சிறப்பு இல்லங்களில் தங்கியிருக்கும் பயனாளிகளுக்கு தேவையான உணவு, உடை, மற்றும் அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருள்கள் அனைத்தும் உள்ளுர் நன்கொடையாளர்களிடம் பணமாகவும், பொருளாகவும் வாங்கி நடத்தப்பட்டு வருகிறது.

**இந்த ஆண்டு நன்கொடை பெற்றதின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

ஸ்பாஸ்டி சிறப்பு தொழிற்பயிற்சி இல்லத்திற்கு இந்த ஆண்டு ஒருவேளை உணவாக 708 நபர்களும், ஒருநாள் உணவாக 31 நபர்களும் கொடுத்து உதவி செய்துள்ளார்கள். நன்கொடையாக ரூ. 83,122/- கிடைத்துள்ளது.

நல்ல சமாரியன் முதியோர் இல்லத்திற்கு இந்த ஆண்டு ஒருநேர உணவாக 408 நபர்களும், ஒருநாள் உணவாக 6 நபர்களும் கொடுத்து உதவி செய்துள்ளார்கள். நன்கொடையாக ரூ.21,500/-ம் கிடைத்துள்ளது.

அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்திற்கு ஒரு நேர உணவாக 311 நபர்களும், நன்கொடையாக ரூ.61,700/- கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழில் பயிற்சி இல்லத்திற்கு இந்த ஆண்டு ஒருவேளை உணவாக நபர்களும் ஒருநாள் உணவாக நபர்களும் கொடுத்து உதவி செய்துள்ளார்கள். நன்கொடையாக ரூ. /- கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

**இந்த ஆண்டு உணவு மற்றும் பணம் நன்கொடை விபரம் இல்லங்கள் வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ. எண் | சிறப்பு இல்லங்கள் | ஒருநேர உணவாக வழங்கியவர்கள் | ஒருநாள் உணவாக வழங்கியவர்கள் | நன்கொடை Rs. |
|---|---|---|---|---|
| 1. | மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற் பயிற்சி இல்லம் - திருப்பதிசாரம் | | | |
| 2. | ‘ஸ்பாஸ்டி’ மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான தொழிற் பயிற்சி இல்லம்- புளியடி | 708 | 31 | 83,122/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | நல்ல சமாரியன் முதியோர் இல்லம் - ஆசாரிபள்ளம் | 408 | 6 | 21,500/- |
| 4. | அன்பாலயா மனநோயாளிகள் மறுவாழ்வு இல்லம். | 311 | - | 61700/- |
| | | | | |

## பொருளாக கொடுத்து உதவி செய்தவர்கள்:

## ‘ஸ்பாஸ்டி’ மனவளர்ச்சிகுன்றிய ஆண்களுக்கான தொழிற் பயிற்சி மையம்-புளியடி

### பொருளாக கொடுத்து உதவி செய்தவர்கள்:

01.01.2021 அன்று Helping Hands சார்பில் நிக்கர் மற்றும் T-சர்ட் அனைத்து மாணவர்களுக்கும் வாங்கி கொடுத்துள்ளார்கள். 02.01.2021 அன்று HDP Finance சார்பில் 10 பிளாஸ்டிக் செயர், 5 பிளாஸ்டிக்பாயும், 16.01.2021 அன்று வடசேரியை சேர்ந்த திரு. ராபின் அவர்கள் 2 கட்டிலும், 17.01.2021 அன்று பாண்டிசேரியை சேர்ந்த திரு. ராஜ சேகர் அவர்கள் 80 பெட்சீட்டும், 21.01.2021 அன்று பார்வதிபுரத்தை சேர்ந்த திருமதி. பிரேமா அவர்கள் மாணவர்கள் அனைவருக்கும் நிக்கர் மற்றும் T-சர்ட்டும்,



08.02.2021 அன்று ஞானம் காலனியை சேர்ந்த திருமதி. மஞ்சு அவர்கள் 65 பிளாஸ்டிக் செயரும்,

28.03.2021 அன்று கலுங்கடியை சேர்ந்த திரு. விஜயலால் அவர்கள் 40 பிளாஸ்டிக் செயரும், 30.03.2021 அன்று பத்மனாபபுரம் பரலோக மாதா இளைஞர் இயக்கம் சார்பில் 13 Steel கட்டிலும்,




29.06.2021 அன்று ரோட்டரி கிளப் வெஸ்ட் நாகர்கோவில் சார்பில் பிளாஸ்டிக் பக்கெட் -3, மக்கு -3, குப்பை அள்ளும் தட்டு -2 மற்றும் மாஸ்க் ஆகியவைகளும்,

04.07.2021 அன்று திரு. Ayubkan அவர்கள் 30 நிக்கர் மற்றும் T-சர்ட்டும்,

23.08.2021 அன்று வடசேரி சக்தி கார்டன் பகுதியை சேர்ந்த திருமதி. வல்சலா குமாரி 6 LED Tube செட்டும்,

07.10.2021 அன்று சுங்கான்கடையை சேர்ந்த திரு. சேகர் என்பவர் ஒரு வீல் செயரும்,

02.11.2021 அன்று கிறிஸ்டோபர் நகரை சேர்ந்த திருமதி. விமலா அவர்கள் நிக்கர் மற்றும் T-சர்ட்டும்,

11.11.2021 அன்று Yellow Trust சார்பில் நிக்கர் மற்றும் T-சர்ட்டும்,

20.11.2021 அன்று குருசடியை சேர்ந்த திரு. பிராங்கிளின் குமார் அவர்கள் 6 Fan-ம்,

09.12.2021 அன்று மேலராமன்புதூர் Sisters of Charity St. Anns சார்பில் பெட்சீட், மளிகை, சோப்பு, டவ்வல் ஆகிய பொருட்களும்,

22.12.2021 அன்று சைமன் நகரை சேர்ந்த Dr. ஜாண் சுரேஷ் முத்தையா அவர்கள் மாணவர்கள் அனைவருக்கும் நிக்கர் மற்றும் T-சர்ட்டும்,

23.12.2021 அன்று வில்லியம் பூத் சமூக சேவை இயக்கம் சார்பில் 100 நிக்கர், 100 T-சர்ட், 100 பெட்சீட் ஆகியவையும்,

29.12.2021 அன்று குருந்தங்கோட்டை சேர்ந்த திரு. ஜெகன் அவர்கள் 30 T-சர்ட்டும் வாங்கி கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

மற்றும் பலர் அரிசி, மளிகை, சினேக்ஸ், சோப்பு, எண்ணெய், பிரஸ், பேஸ்ட், சீனி, தேயிலை, லோசன், டெட்டால் ஆகிய பொருட்களும் வாங்கி தந்து உதவி செய்துள்ளார்கள்.

## **<u>அன்பாலயா மனநோயாளிகள் இல்லம் - ஈத்தன்காடு.</u>**

பொருள்களாக 2 மாதத்திற்கு ஒருமுறை காட்டுவிளையைச் சேர்ந்த



திரு. ஜெரால்டு அவர்கள் 50 கிலோ சீனியும், 23.01.21 அன்று Inner Wheel Club வாயிலாக Napkin-ம், 06.03.21 அன்று பருத்திவிளை திரு. தாமஸ் பெரிடன் அவர்கள் தையல் மிஷின் வாங்குவதற்கு ரூ.10000/-ம் 15.03.21 அன்று சுவாமிதோப்பு சேர்ந்த திருமதி. ஜெயசீலி அவர்கள் வாயிலாக திரு. தீமேத்தேயு அவர்கள் ஆம்பிளிபயர், 2 மைக், 2 பாக்ஸ் ஆகியவையும், 01.05.21 அன்று பரைக்குன்று திருஇருதய ஆலய மக்கள் சார்பாக தையல்மிஷின் வாங்குவதற்கு ரூ.7164-ம், 10.08.21 அன்று UNICO TRUST வாயிலாக நைட்டியும்,

10.08.2021 அன்று Unico Trust வாயிலாக நைட்டியும்,

02.11.21 அன்று பெங்களுர் ராபர்ட் Bosch Engineering & Business Solution Pvt Ltd. கம்பெனி வாயிலாக 25 Pillow & Pillow Cover, 7 Plastic Chair, 5 Aluminium Vally, 15 Bulb, Tube light, BP Apparatars-ம் வாங்கி தந்தார்கள்.

மேலும் பலர் அன்பியங்கள், குழுக்கள், சபை மக்கள் வாயிலாக அரிசி, மளிகை, Body Soap, Washing Soap, Oil, Surf, Cooker, உருளி, மூடியுள்ள பக்கெட்டுகள், சாரி, நைட்டி, உள்ளாடைகள் ஆகியவையும், தின்பண்டங்கள், பிஸ்கட், ஸ்நாக்ஸ், வாழைப்பழங்கள் ஆகியவையும் வாங்கி தந்து உதவி செய்துள்ளார்கள்.

## நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:




பொருட்களாக Nighties, Sarees, Surf, Washing Soap, Body Soap, Biscuits, Dettol, T.V, மளிகைப் பொருட்கள், Rice, Gas Stove, Steel Cot, Beuro ஆகியவை பொருட்களாகவும் தந்து உதவி செய்தார்கள்.

## மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற் பயிற்சி மையம் - திருப்பதிசாரம்.

## 9. விழிப்புணர்வு கருத்து கொடுத்தல்:

நமது சிறப்பு இல்லங்களை பார்வையிட வரும் தனிநபர்களுக்கும், குழுவாக வரும் குழுக்களுக்கும் குடும்பமாக வருபவர்களுக்கும் நமது நிறுவனத்தைப் பற்றியும், நிறுவனத்தின் கீழ் செயல்படும் சிறப்பு இல்லங்கள் பற்றியும், சிறப்பு இல்லங்களில் இருக்கும் பயனாளிகளை பராமரிக்கும் விதம் பற்றியும், உள்ளூர் நன்கொடையாளர்களிடம் உதவிகள் பெற்று நடத்துவது பற்றியும் விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது. பார்வையிட வந்த குழுக்களில் சிலவற்றை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையம் - திருப்பதிசாரம்:

## ஸ்பாஸ்டி மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பிற்சி மையம்:

07.03.2021 அன்று மண்டைக்காடு கருமண் கூடல் லுத்ரன் சபையினர் 40 பேருக்கும், 09.03.2021 அன்று குறும்பனை 9-வது அன்பிய மக்களுக்கும், 13.03.2021 அன்று இனையம் புத்தன்துறை 24-வது அன்பிய மக்களுக்கும், 14.03.2021 அன்று கீழ ஆசாரிபள்ளம் புனித பனிமய அன்னை நண்பர்கள் இயக்க உறுப்பினர்களுக்கும்,

13-வது அன்பிய மக்களுக்கும், 16.03.2021 அன்று புதுகுடியிருப்பு 3-வது அன்பிய உறுப்பினர்களுக்கும், 20.03.2021 அன்று விழுந்தையம்பலம் பங்கு மக்களுக்கும், 27.03.2021 அன்று பூட்டேற்றி புனித அந்தோணியார் ஆலய இளையோர் இயக்க உறுப்பினர்களுக்கும், 30.03.2021 அன்று பத்மனாபபுரம் பரலோக மாதா இளைஞர் இயக்க உறுப்பினர்களுக்கும்,

19.11.2021 அன்று குலசேகரம் ஸ்ரீராம கிருஷ்ணா நர்சிங் கல்லூரி மாணவ மாணவிகள் 38 பேருக்கும் விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

## அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:

11.03.2021 அன்று மாதாபுரம் அன்பிய மக்களுக்கும், தக்கலை புனித மிக்கேல் ஆலய மறைசாட்சி தேவசகாயம் பிள்ளை அன்பிய மக்களுக்கும்,




12.03.2021 அன்று கன்னியாகுமரி மாவட்ட பேனா நண்பர் பேரவை உறுப்பினர்களுக்கும், 18.03.2021 அன்று பிலாவிளை புனித ஜார்ஜியார் ஆலய மக்களுக்கும், 21.03.2021 அன்று பெரியவிளை C.L.C சபை மக்களுக்கும், செந்தறை புனித சவேரியார் ஆலய மக்களுக்கும், 25.03.2021 அன்று வாணியகுடி பிரான்சிஸ் மூன்றாம் சபை மக்களுக்கும், 26.03.2021 அன்று சரல் புனித பேதுரு ஆலய CLC சபை மக்களுக்கும், 27.03.2021 அன்று கோணங்காடு புனித அல்போன்சம்மாள் அன்பிய மக்களுக்கும், 28.03.2021 அன்று காட்டுவிளை மங்கள அன்னை ஆலய இளைஞர் இயக்க



மக்களுக்கும், 29.03.2021 அன்று பரைக்குன்று இயேசுவின் திரு இருதய ஆலய மக்களுக்கும், 01.05.21 அன்று பரைக்குன்று இயேசுவின் திரு இருதய ஆலய பங்கு பேரவை மக்களுக்கும், 18.07.2021 அன்று Fidelis group நிர்வாகிகளுக்கும்,

19.11.2021 அன்று மார்த்தாண்டம் சி.எஸ்.ஐ நர்சிங் கல்லூரி 3-வது வருட மாணவ, மாணவிகளுக்கும் மேலும் உணவுகள் வழங்க வந்த நபர்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும், நமது 'கார்டு' நிறுவனத்தை பற்றியும் கார்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் சிறப்பு இல்லங்கள் பற்றியும், அவர்களை இல்லங்களில் சேர்த்துக் கொள்வது பற்றியும், அவர்களை பராமரிப்பது பற்றியும், அவர்களின் தேவைகளை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பது பற்றியும் கருத்துக்கள் கொடுக்கப்பட்டது.

**<u>நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:</u>**



இல்லங்களை பார்வையிட வரும் சமுதாய மக்களிடம் நமது **'கார்டு'** நிறுவனத்தின் பணிகளை பற்றியும் இந்நிறுவனத்தின் கீழ் செயல்படும் கிளை நிறுவனங்களை குறித்தும் முதியோர்களை பராமரிப்பது, சுகவீனம் ஏற்படும் போது அவர்களை கவனிப்பதும் அதனால் சந்திக்கும் பிரச்சனைகளையும், முதியோர்களின் தேவைகளையும் எந்த சூழ்நிலையில் உள்ளவர்களை சேர்த்துக் கொள்கிறோம் என்பது பற்றியும், முற்றிலும் சமுதாய மக்களின் பங்களிப்போடு தான் இந்த பணிகளை செய்கிறோம் என்னும் கருத்துக்கள் கூறப்படுகின்றது.

## <u>10. விழாக்கள் கொண்டாடுதல்:</u>

### <u>மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையம்:</u>

**மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான பயிற்சி மையத்தில் கொண்டாடப்பட்ட விழாக்கள் தேதி வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாட்கள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

## ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையம்:



14.01.2021 அன்று ஸ்பாஸ்டி சிறப்பு தொழிற்பயிற்சி இல்லத்தில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. காலையில் அனைவருக்கும் புத்தாடை அணிவித்து பொங்கலிடப்பட்டது. பாயாசம் வைக்கப்பட்டு அனைவருக்கும் கொடுக்கப்பட்டது.



26.01.2021 அன்று ஸ்பாஸ்டி சிறப்பு தொழிற்பயிற்சி இல்லத்தில் குடியரசு தினவிழா கொண்டாடப்பட்டது. கணியாகுளம் பஞ்சாயத்து தலைவி திருமதி. ஏஞ்சலின் சரோனா அவர்கள் கலந்து கொண்டு சுதந்திர கொடியேற்றி வைத்து வாழ்த்துரை வழங்கி இனிப்புகள் வழங்கி சிறப்பித்தார்கள்.

15.08.2021 அன்று ஸ்பாஸ்டி சிறப்பு தொழிற்பயிற்சி இல்லத்தில் வைத்து சுதந்திர தினவிழா கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினர் திரு. சிவகுமார் AIPWA-President அவர்கள் சுதந்திர தின கொடியேற்றி வைத்து வாழ்த்துரை வழங்கி இனிப்பு வழங்கினார்கள். அன்றைய தினம் காலை, மதியம் உணவும் வழங்கினார்கள்.

14.10.2021 அன்று சரஸ்வதி பூஜை விழா கொண்டாடப்பட்டது. மேற்படி நாளில் மாலை 5.00 மணியளவில் சரஸ்வதி பூஜை வைக்கப்பட்டது. பிள்ளைகளுக்கு சுண்டல் வழங்கப்பட்டது.



04.11.2021 அன்று ஸ்பாஸ்டி சிறப்பு தொழிற்பயிற்சி இல்லத்தில் வைத்து தீபாவளி விழா கொண்டாடப்பட்டது. மாணவர்களுக்கு புத்தாடை அணிவிக்கப்பட்டது. மத்தாப்பு, பட்டாசு வெடித்து கொண்டாடினார்கள்.

11.11.2021 அன்று ஸ்பாஸ்டி சிறப்பு தொழிற்பயிற்சி மையத்தில் புதிதாக கட்டப்பட்ட கட்டிட திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.




இதில் கோட்டார் மறை மாவட்ட முன்னாள் ஆயர் மேதகு பீட்டர் ரெமிஜியூஸ் DD அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி கட்டிடத்தை திறந்து வைத்தார்கள். நமது கிளை சிறப்பு இல்ல பயனாளிகள் அனைவரும் கலந்து கொண்டு திறப்பு விழாவை சிறப்பித்தார்கள்.

## ஸ்பாஸ்டி மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான பயிற்சி மையத்தில் இந்த ஆண்டு கொண்டாடப்பட்ட விழாக்கள் விபரம்:

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாட்கள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 14-01-2021<br>26.01.2021 | பொங்கல் விழா<br>குடியரசு தினவிழா |
| 2. | 15-08-2021 | சுதந்திர தினவிழா |
| 4. | 14-10-2021 | சரஸ்வதி பூஜை விழா |
| 5. | 04.11.2021 | தீபாவளி |
| 6. | 11.11.2021 | கட்டிட திறப்பு விழா |

## நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:

**1. பொங்கல் விழா:**



14.01.2021 அன்று அதிகாலை முதியோர் இல்ல வாசல் முன் முதியோர்களால் பொங்கலிட்டு தைப் பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**2. சரஸ்வதி பூஜை:**

14.10.21 அன்று சரஸ்வதி பூஜை விழாவை முன்னிட்டு முதியோர்களால் சரஸ்வதி படம் வைத்து பூஜை செய்து சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**3. தீபாவளி திருநாள்:**



04.11.2021 தீபாவளி தினத்தன்று முதியோர்களுக்கு புத்தாடைகள் அணிவித்தும் உதவி திட்ட இயக்குனர் திரு. ஸ்டேன்லி அவர்கள் தலைமையில் மத்தாப்பு கொழுத்தியும், ஆதிபராசக்தி பீடம் பக்தர்கள் சார்பில் காலை உணவு மற்றும் இனிப்புகள் வழங்கியும் தீபாவளி விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**4. கட்டிட திறப்பு விழா:**

11.11.2021 அன்று 'Spasti' ஆண்களுக்கான தொழிற் பயிற்சி மையத்தில் புதிய கட்டிட திறப்பு விழாவிற்கு முதியோர்களை அழைத்து செல்லப்பட்டது.

**5. திருக்கார்த்திகை தீப விழா:**

26.11.2021 அன்று மாலை 6 மணிக்கு முதியோர்களால் கார்த்திகை தீபம் ஏற்றி திருக்கார்த்திகை தீபவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## 6. கிறிஸ்மஸ் விழா:




22.12.2021 அன்று மாலை 5 மணிக்கு Good Samaritan Club சார்பில் கிறிஸ்மஸ் விழா கேக் வெட்டியும் முதியோர்களுக்கு பரிசு பொருட்கள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் கொண்டாடப்பட்ட விழாக்கள் விபரம்:

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாட்கள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 14-01-2021 | பொங்கல் விழா |
| 2. | 14-10-2021 | சரஸ்வதி பூஜை விழா |
| 3. | 04-11-2021 | தீபாவளி |
| 4. | 26-11-2021 | கார்த்திகை தீபத்திருநாள் |
| 5. | 22-12-2021 | கிறிஸ்மஸ் விழா |

## அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:

14.01.21 அன்று காலை 9.00 மணிக்கு அன்பாலயா இல்லத்தில் பொங்கல் விழாவில் பொங்கல் வைத்தும் நடனமாடியும் சிறப்பாக கொண்டாடினர்.

26.01.21 அன்று அன்பாலயா இல்லத்தில் காலை 9.00 மணிக்கு அன்பாலயா இல்ல ஒருங்கிணைப்பாளர் தேசிய கொடியேற்றி பயனாளிகளின் கலைநிகழ்ச்சிகளும் வழங்கி குடியரசு தினவிழா கொண்டாடப்பட்டது.

08.03.21 அன்று அன்பாலயா இல்லத்தில் உலக மகளிர் தினவிழா திட்ட இயக்குநர் Dr. S. பேசில்ராஜன் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் சென்டர் ஃபார் ஹோப் நிர்வாக இயக்குநர் திருமதி. பன்னீர் செல்வம் அவர்களும், கார்டு நிர்வாக உதவி திட்ட அலுவலர் செல்வி. அமல சரோஜி அவர்களும், திருமதி. விமலராணி அவர்களும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள். இடைஇடையே பயனாளிகளின் கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது.






15.08.21 அன்று காலை அன்பாலயா இல்லத்தில் காலை 9.00 மணிக்கு அன்பாலயா இல்ல ஒருங்கிணைப்பாளர் அவர்கள் தேசிய கொடியேற்றி பயனாளிகளுக்கு இனிப்புகள் வழங்கி சுதந்திர தினவிழா கொண்டாடப்பட்டது.

08.10.21 அன்று அன்பாலயா இல்லத்தில் காலை 11.30 மணிக்கு உலக மனநலநாள் திட்ட இயக்குநர் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. இவ் விழாவில் நீதி அரசர் திரு. வேல்முருகன் அவர்களும், நாகர்கோவில் சமூக நல அலுவலர் திருமதி. R. சரோஜினி அவர்களும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள். இடைஇடையே பயனாளிகளின் கலைநிகழ்ச்சிகளும் வழங்கி சிறப்பித்தார்கள்.



04.11.21 அன்று அன்பாலயா இல்ல பயனாளிகள் புத்தாடை உடுத்தி தீபாவளி பண்டிகை கொண்டாடினார்கள்.

19.11.21 அன்று அன்பாலயா இல்ல பயனாளிகள் தீபம் ஏற்றி பாடல் பாடி கார்த்திகை தீப விழா கொண்டாடினார்கள்.

19.12.21 அன்று காலை 11.30 மணிக்கு அன்பாலயா இல்லத்தில் முட்டம் வட்டார இளைஞர் இயக்கம், இளையோர் இயக்கம் ஒன்றிணைந்து திட்ட இயக்குநர் Dr. S. பேசில்ராஜன் அவர்கள் தலைமையில் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் முட்டம் வட்டார இளைஞர் இயக்க இயக்குநர் Rev. Fr. பபியான் கடியபட்டணம் பங்குதந்தை அவர்கள் கிறிஸ்மஸ் செய்தி கூறினார்கள். அன்பாலயா இல்ல திட்ட இயக்குநர் Dr.S. பேசில்ராஜன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். அன்பாலயா இல்ல பயனாளிகளின் கலைநிகழ்ச்சிகளும், இளைஞர் இயக்க இளைஞர்களும் கலைநிகழ்ச்சிகள் வழங்கினார்கள். கிறிஸ்மஸ் கேக் வெட்டி பயனாளிகளுக்கு கிறிஸ்மஸ் பரிசும் கொடுக்கப்பட்டது. நன்றியுரை அன்பாலயா இல்ல ஒருங்கிணைப்பாளர் அவர்கள் கூறினார்கள்.



**<u>அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் நடைபெற்ற விழாக்கள் தேதி வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.</u>**

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாட்கள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 14.01.2021<br>26-01-2021 | பொங்கல் விழா<br>குடியரசு தின விழா |
| 2. | 08.03.2021 | பெண்கள் தின விழா |
| 3. | 15-08-2021 | சுதந்திர தினவிழா |
| 4. | 08.10.2021 | மனநல நாள் |
| 5. | 04-11-2021 | தீபாவளி |
| 6. | 19-11-2021 | கார்த்திகை தீபவிழா |
| 7. | 19.12.2021 | கிறிஸ்மஸ் விழா |

## 11. பெற்றோர் மற்றும் உறவினர்களின் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்:

### மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற்பயிற்சி மையம்:

### ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையம்:

11.04.2021 அன்று ஸ்பாஸ்டி சிறப்பு தொழிற்பயிற்சி மைய மாணவர்களின் பெற்றோர்களுக்கு பெற்றோர் சங்க கூட்டம் நடத்தப்பட்டது. அதில் 19 பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.

### அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:

21.02.21 - 8 பெற்றோர் உறவினர் கூட்டம்

28.11.21 - 8 பெற்றோர் உறவினர் கலந்து கொள்ளப்பட்டது.

**இவ்வருடம் இல்லங்கள் வாரியாக நடைபெற்ற பெற்றோர் மற்றும் உறவினர் கூட்டங்களும், கலந்துகொண்ட பெற்றோர் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ.எண் | சிறப்பு இல்லங்களின் பெயர்கள் | நடைபெற்ற பெற்றோர் மற்றும் உறவினர் கூட்டங்கள் | கலந்து கொண்ட பெற்றோர்கள் |
|---|---|---|---|
| 1. | SMR | | |
| 2. | SPASTI | 1 | 19 |
| 3. | ANBALAYA | 2 | 16 |
| மொத்தம் | | | |

## 12. பணியாளர்கள் கூட்டம் நடத்துதல்:

பணியாளர்கள் பணிகளை திட்டமிட்டு செய்வதற்கும் செய்த பணிகளை பற்றிய நிறை குறைகளை கலந்து பேசி குறைகளை நிவிர்த்தி செய்து பணிகளை செவ்வனே செய்ய வேண்டி பணியாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு நடைபெற்ற பணியாளர்கள் கூட்டம் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையத்தில் பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆண்டு ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையத்தில் 4 பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது.

நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் இந்த ஆண்டு பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் இந்த ஆண்டு 5 பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

**இவ்வருடம் இல்லங்கள் வாரியாக நடைபெற்ற பணியாளர் கூட்டங்கள் பற்றிய விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ.எண் | சிறப்பு இல்லங்களின் பெயர் | நடைபெற்ற பணியாளர் கூட்டங்கள் |
|---|---|---|
| 1. | SMR | |
| 2. | SPASTI | 4 |
| 3. | GSHA | |
| 4. | ANBALAYA | 5 |
| மொத்தம் | | |

## 13. ஒருங்கிணைப்பாளர் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்:

ஒவ்வொரு திட்டத்தின் பொறுப்பாளர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் தங்கள் திட்டத்தின் கீழ் திட்டமிட்ட பணிகளை செய்து முடிக்கப்பட்டதைப்பற்றி கலந்து பேசவும், அடுத்த மாதம் செய்ய வேண்டிய பணிகளை திட்டமிடவும், வேண்டி மாதந்தோறும் முதல் சனிக்கிழமைகளில் ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது. இந்த ஆண்டு ஆறு ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது.

## இதர பணிகள்:

### நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:

#### 1. தேர்தல் விழிப்புணர்வு முகாம் நடத்துதல்:

22.03.2021 அன்று காலை 9 மணியளவில் 06.04.2021 அன்று நடைபெற இருந்த சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு விழிப்புணர்வு




பிரச்சார பேரணி ஆசாரிப்பள்ளம் காவல் நிலையத்தில் இருந்து எமது முதியோர் இல்லம் வரை நடத்தப்பட்டது. இப்பேரணியை தேர்தல் அலுவலர் திரு. மைக்கிள் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். மாவட்ட சமூக நலத்துறை அதிகாரி திருமதி. சரோஜினி, மகளிர் திட்ட இயக்குனர், "கார்டு" திட்ட இயக்குனர் மற்றும் பணியாளர்கள், முதியோர்கள் 26 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## 2. தேர்தலில் வாக்களித்தல்:

01.04.2021 அன்று முதியோர் இல்லத்தில் வைத்து திருமதி. மீனாட்சி



அவர்களுக்கு தபால் ஓட்டு போடப்பட்டது. 06.04.2021 அன்று ஆசாரிப்பள்ளம் தபால் அலுவலகத்திற்கு சென்று திருமதி. சத்திய பாமா, திருமதி. தயா, செல்வி. பார்வதி, திருமதி. அமுதா ஆகியோர் வாக்களித்தனர்.

## 3. ஆதார்கார்டு எடுத்தல்:

13.10.2021 அன்று அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் நடைபெற்ற ஆதார் சிறப்பு முகாமில் 6 பேருக்கு ஆதார் எடுக்கப்பட்டது.

## 4. பிற துறை கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்:

09.02.2021 மற்றும் 17.06.2021 ஆகிய தினங்களில் Rotary Club of Quean's சார்பில் நடத்தப்பட்ட கூட்டங்களில் கலந்து கொள்ளப்பட்டது.

**5. முதியோர்களுக்கு தேவையான மருந்து எண்ணெய் வாங்குதல்:**

ஒவ்வொரு மாதமும் கோட்டார் ஆயுர்வேதா மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்று தேவையான மருந்து எண்ணெய் வாங்கப்பட்டு வருகின்றது.

**அன்பாலயா - இதர பணிகள்:**

01.05.2021 முதல் 07.05.2021 வரை கபசுர குடிநீர், லேகியம், மாத்திரைகள் கொடுக்கப்பட்டது.



12.07.2021 அன்று அன்பாலயா இல்ல பயனாளிகளுக்கு வெள்ளிச்சந்தை அரசு ஆரம்ப சுகாதார மருத்துவர் திருமதி. அமலராணி மற்றும் பணியாளர்கள் அன்பாலயா இல்லத்தில் வந்து அன்பாலயா பயனாளிகள் 47 நபருக்கும் கொரோனா முதலாவது தடுப்பூசி போடப்பட்டது.



06.09.21 அன்று காசநோய் விழிப்புணர்வு முகாம் முட்டம் ஆரம்ப சுகாதார நிலையம் சார்பாக Dr. பிரதீப் அவர்களால் அன்பாலயா இல்லத்தில் நடத்தப்பட்டது.

10.10.2021 அன்று அன்பாலயா இல்ல பயனாளிகள் 48 நபருக்கு 2-வது டோஸ் கொரோனா தடுப்பூசி போடப்பட்டது.

**5. செய்து முடிக்காத பணிகள்:**

-

**6. திட்ட பணிகளை செய்து முடிக்க உதவியாக இருந்தவர்கள்:**

திட்ட இயக்குனர், உதவி திட்ட இயக்குனர், திட்ட அலுவலர், உதவி திட்ட அலுவலர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், விடுதி பணியாளர்கள் ஆகியோர்கள் திட்ட பணிகளை செய்து முடிக்க உதவியாக இருநதுள்ளார்கள்.

**7. எதிர்கால திட்டங்கள்:**

1. ஆதரவற்றவர்களை சந்தித்தல்
2. நமது சிறப்பு இல்லங்களை பார்வையிடுதல்.
3. நமது சிறப்பு இல்லங்களில் புதிய நபர்களை சேர்த்தல்.
4. ஆதார் கார்டு எடுக்க ஏற்பாடு செய்தல்.
5. நன்கொடையாளர்களை சந்தித்தல்.
6. மருத்துவ முகாம்கள் நடத்துதல்.
7. மருத்துவ வசதி செய்து கொடுத்தல்
8. CASE HISTORY எழுதுதல்.
9. நன்கொடைகள் வசூலித்தல்.
10. விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுத்தல்.
11. விழாக்கள் கொண்டாடுதல்.
12. பெற்றோர் மற்றும் உறவினர்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்.
13. பணியாளர்கள் கூட்டங்கள் நடத்துதல்.
14. ஒருங்கிணைப்பாளர் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்.

திருப்பதிசாரம்,
12-09-2022. திட்ட அலுவலர்.

திட்ட இயக்குனர்.